## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1991 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் (திருத்தம்)

---

*[1991, மாச்சு மாதம் 08 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1991, மாச்சு மாதம் 08 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 45* — *தபாற் செலவு : ரூபா 1.00*

# 1991 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் (திருத்தம்)

[1991, மாச்சு மாதம் 8 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ—ஓ. 61/89

**1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

சுருக்கப்பெயர்.

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் (திருத்தம்) என எடுத்துக்காட்டப்படலாம்.

1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்கச் சட்டத்தின் 1 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. 1988 ஆம் ஆண்டின் 79 ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் 1 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் சொற்களைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

"இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகள் தொடர்பில் வெவ்வேறு தேதிகள் இடலாம்/இடப்படலாம்"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

வழக்குரைகளைத் திருத்துதல்.

93. (1) வழக்கு விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக நீதிமன்றத்திற்குச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது வழக்கிற்கான எல்லாத் திறத்தவர்களின் முன்னிலையிலும், அல்லது அவர்களுக்கும் நியாயமாக அறிவிக்கப்பட்ட பின்னர், நீதிமன்றமானது, சேர்த்தல் அல்லது மாற்றுதல் அல்லது விட்டுவிடுதல் வாயிலாக வழக்கிலான எல்லா வழக்குரைகளையும் அதன் தற்றுணிபில் திருத்துவதற்கான முழுத் தத்துவத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) வழக்கு விளக்கத்திற்கென முதலில் நிர்ணயிக்கப்பட்ட நாளுக்கு முன்னதாக அல்லது அதற்குப் பின்பும் அத்துடன் இறுதித் தீர்ப்புக்கு முன்வரும் எவையேனும் வழக்குரைகளுக்கான விண்ணப்பம் எதுவும், வேறேதேனும் எதுவின் மேலன்றியும், அத்தகைய திருத்தமானது அனுமதிக்கப்படாதுவிடின் பாரியதும் பரிகரிக்கப்பட முடியாததுமான அநீதி விளைவிக்கப்படும் எனவும், அத்துடன் அவ்வாறு விண்ணப்பிக்கும் திறத்தவர் மன்னிக்கத்தகாத கவனக் கேட்டுக்குக் குற்றவாளியாக இருக்கவில்லையெனவும் அதனால் பதியப்பட வேண்டிய காரணங்களுக்காகவும் நீதிமன்றம் திருப்திப்பட்டாலொழிய அனுமதிக்கப்படுதலாகாது.

(3) ஒராம் அல்லது இரண்டாம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்படக்கூடிய வழக்குரை களின் திருத்தத்திற்கான விண்ணப்பம் எதுவும் செல வினங்கள் பின்போடல்கள், நீதிமன்றம் தகுதியெனக் கருதும் வேறு வகையிலான அத்தகைய நியதிகளின் மீதாக இருத்தல் வேண்டும்.

(4) சேர்த்தல்கள், மாற்றங்கள் அல்லது விட்டுவிடு கைகள் கட்டளையினால் பாதிக்கப்பட்ட வழக்குரையின் முகப்பில் தெளிவாகச் செய்யப்படுதல் வேண்டும்; அல்லது இது வசதியாகச் செய்யப்பட முடியாது விட்டால் வழக்குப் பதிவேட்டில் திருத்தப்பட்ட வழக்குரைக்கு மாற்றஞ் செய்யப்பட்டவாறான தெளிவான பிரதி யொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்த கைய சேர்ப்பு அல்லது மாற்றம் அல்லது விட்டு விடுகை ஒவ்வொன்றும் நீதிபதியினால் ஒப்பமிடப்படு தல் வேண்டும்.'

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையில் ஒவ்வாமை ஏதேனும் காணப்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.